9. அறிவிப்புகள்-தொடர்ச்சி

(உ) தமிழ்நாடு வேளாண் விளைபொருள் மற்றும் கால்நடை ஒப்பந்தப் பண்ணைத்தொழில் மற்றும் சேவைகள் (ஊக்குவிப்பு மற்றும் எளிதாக்குதல்) சட்டமுன்வடிவு, 2019 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் மற்றும் கால்நடை ஒப்பந்தப் பண்ணைத்தொழில் மற்றும் சேவைகள் (ஊக்குவிப்பு மற்றும் எளிதாக்குதல்) சட்டமுன்வடிவைப் பேரவையில் ஆய்வு செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

14. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

(ஐ) தமிழ்நாடு வேளாண் விளைபொருள் மற்றும் கால்நடை ஒப்பந்தப் பண்ணைத்தொழில் மற்றும் சேவைகள் (ஊக்குவிப்பு மற்றும் எளிதாக்குதல்) சட்டமுன்வடிவு, 2019

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் மற்றும் கால்நடை ஒப்பந்தப் பண்ணைத்தொழில் மற்றும் சேவைகள் (ஊக்குவிப்பு மற்றும் எளிதாக்குதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2019), மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் மற்றும் கால்நடை ஒப்பந்தப் பண்ணைத்தொழில் மற்றும் சேவைகள் (ஊக்குவிப்பு மற்றும் எளிதாக்குதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2019)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

@ 14—2—2019 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[2019 பிப்ரவரி 14

பிற்பகல் 2-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, என்ன? (குறுக்கீடு) சொல்லுங்கள்.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவு, கூட்டுறவு முறையிலே விவசாயம் செய்ய வேண்டும் என்ற வகையிலே அமைந்துள்ளது. இஸ்ரேல், கூட்டுறவு முறையிலே மிகச் சிறப்பாக விவசாயம் செய்து, உலகத்துக்கே பழங்களை ஏற்றுமதி செய்யக்கூடிய நாடாக இருக்கிறது. இப்பொழுது கூட்டுறவுப் பண்ணைய முறையிலே பதிய சில, பல விவசாயிகள் கேட்கிறார்கள், ஆனால் பதிவு செய்யாமல் இருக்கிறார்கள். ஆகவே, அப்படியில்லாமல் அனைத்து விவசாயிகளும் அதில் பதிவு செய்ய வேண்டும். அப்படிப் பதிவு செய்தால்தான், அவர்கள் அந்தக் கூட்டுறவு முறையிலே விவசாயம் செய்ய முடியும். வரப்பெல்லாம் சின்னச் சின்னதாக வெட்டியிருக்கின்ற காரணத்தால், விவசாயம் சரியாக இல்லை என்று இதிலேயே சொல்லியிருக்கிறீர்கள். அதேபோல், ஏழை விவசாயிகளை துறையின் மூலமாக மொத்தமாக இணைத்து, ஐநூறு ஏக்கர், ஆயிரம் ஏக்கர் என்ற அளவில் விவசாயம் செய்து, அந்த கூட்டுறவுப் பண்ணைய முறை சிறப்பாக வருவதற்கு இதிலே திருத்தங்கள் செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் மற்றும் கால்நடை ஒப்பந்தப் பண்ணைத் தொழில் மற்றும் சேவைகள் (ஊக்குவிப்பு மற்றும் எளிதாக்குதல்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் நமது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு, தமிழக விவசாயிகளின் நலனிற்காகவும், பாதுகாப்பிற்காகவும், ஒப்பந்தப் பண்ணைய சாகுபடி திட்ட வரைவினைத் தயாரித்துள்ளது. இதுவரை, தமிழகத்தில் ஒப்பந்தப் பண்ணையம் செய்யும் விவசாயிகளின் பாதுகாப்பிற்காக எந்தவொரு சட்டமும் இயற்றப்படவில்லை. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையில் செயல்படும் இந்த அரசு, விளைபொருள் விற்பனைக்கு உத்தரவாதம் அளித்திடும் சட்ட வரைவினைத் தயாரித்து இன்று அறிமுகப்படுத்தியுள்ளது.

2019 பிப்ரவரி 14] [திரு. இரா. துரைக்கண்ணு]

சிறப்பு அம்சங்கள்-ஒப்பந்தப் பண்ணையம் முறையில் விவசாயிகளோ அல்லது உணவு உற்பத்தியாளர் நிறுவனங்களோ, அவர்கள் உற்பத்தி செய்யும் விளைபொருட்களை தனி நபருக்கோ அல்லது உணவு உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கோ அல்லது உணவு பதப்படுத்தும் நிறுவனங்கள் அல்லது ஒப்பந்தக் கொள்முதல் நிறுவனங்களுக்கோ வழங்கிடலாம். சாகுபடியைத் துவக்குவதற்கு முன்னரே, விளைபொருளுக்கான அளவு மற்றும் விலையைப் பெற்று வழங்கிட வேண்டிய காலம் ஆகியவை தீர்மானிக்கப்படுகிறது. விளைபொருட்களை கொள்முதல் செய்யும் நபர் அல்லது நிறுவனம், விவசாயிகளுக்குத் தேவைப்பட்டால், இடுபொருளுடன் தொழில்நுட்பம், உற்பத்திக்குப்பின் செய்ய வேண்டிய பின்செய்நேர்த்தி முறைகளை வழங்கிடும். ஒப்பந்தப் பண்ணையம் சட்ட ரீதியாக வரன்முறைப்படுத்திவிடுவதால், விளைபொருள் விலை குறையும்பொழுது, கொள்முதல் செய்யும் நிறுவனம் அவற்றை வாங்காமல் விட்டுவிடுவதோ, விளைபொருள் விலை அதிகமாகும்பொழுது, விவசாயிகள் ஒப்பந்தம் செய்து கொண்ட கொள்முதல் நிறுவனத்திற்கு ஒப்பந்தம் செய்து கொண்ட அளவு, விளைபொருள் அல்லது கால்நடை வழங்காமல் வேறு வழியில் விட்டுவிடுவதோ தடுக்கப்படுகிறது. ஒப்பந்தப் பண்ணையம், உத்தரவாதக் கொள்முதலுக்கு சட்டரீதியான பாதுகாப்பு அளிப்பதால், விவசாயிகள் தயக்கமின்றி பயிர் சாகுபடி அல்லது கால்நடை வளர்ப்புப் பணிகளை மேற்கொள்ள வழிவகை செய்கிறது. இதன்காரணமாக, பயிர் சாகுபடி பரப்பு மற்றும் கால்நடை வளர்ப்பு, தொழில்ரீதியாக விரிவடைவதுடன், விவசாயிகளின் வாழ்வாதாரம் உயர்ந்திட இச்சட்டமுன்வடிவு அடித்தளமாக அமைந்திடும்.

தற்போதுள்ள ஒப்பந்தப் பண்ணைய முறையில், விவசாயிகளும், விவசாய நிறுவனங்களும் தங்களுக்குள் ஒப்பந்தம் செய்துகொண்டாலும், அவர்களுக்குள்ளே எழும் பிரச்சினைகளைக் களைவதற்கு எவ்வித சட்டமும் நடைமுறையில் இல்லாததால் விவசாயிகளுக்கும் நிறுவனங்களுக்கும் பொருளாதார இழப்பு ஏற்படுகின்றது. தற்போது தயாரிக்கப்பட்டுள்ள சட்டவரைவில், பல்வேறு நிலைகளில் விவசாயிகளுக்கு ஏற்படும் பிரச்சினைகளைக் களைவதற்கு அமைப்புகள் உருவாக்கப்படும். வருவாய்க் கோட்ட அளவில், வருவாய்க் கோட்டாட்சியர் அல்லது சார் ஆட்சியர் தலைமையில் பூசல் தீர்வுக் குழு அமைக்கப்படும். இந்தக் குழு 30 நாட்களுக்குள் ஒப்பந்தம் தொடர்புடைய

பிரச்சினையை விசாரித்து தீர்ப்பு வழங்கிடும். மாவட்ட அளவில், பூசல் தீர்வுக் குழுவின் தீர்ப்பின்மீது, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் 15 நாட்களுக்குள் மேல்முறையீடு செய்யலாம். இதனை விசாரித்து 30 நாட்களுக்குள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் தீர்ப்பு வழங்கப்படும். மாநில அளவில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களது தீர்ப்பின்மீது, மாநில ஆணையத்திடம் மேல் முறையீடு செய்யலாம். மாநில ஆணையம் இதனை விசாரித்து தீர்ப்பு வெளியிடும். இந்தத் தீர்ப்பே இறுதியானது. ஒப்பந்தப் பண்ணைய தரப்புகள், தீர்ப்பின்படி உடனடியாக உரிய தொகையினை விடுவித்திடவேண்டும், இல்லையெனில், 30 நாட்களுக்குள் பற்றுடன் செலுத்திட வேண்டும். இதை வழங்கிடத் தவறிடும்போது, வருவாய் வசூல் சட்டத்தின்படி, தொகை வசூலித்து வழங்கப்படும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய சீரிய தலைமையிலான அரசு, உணவுப் பூங்காக்கள் அமைத்திட நடவடிக்கை எடுத்து வருகிறது. உணவுப் பூங்காக்களில் அமையவுள்ள உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகளுக்கு, விவசாயிகள் தேவையான விளைபொருட்களை ஒப்பந்தத்தின் அடிப்படையில் வழங்கிடவும், இச்சட்ட வரைவு மிகவும் பயனுள்ளதாக அமையும். விவசாயிகளின் நலனைப் பாதுகாக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள இச்சட்டவரைவு, கொள்முதல் நிறுவனங்களின் நலனையும் கருத்தில் கொண்டுள்ளது. இனிவருங்காலங்களில், ஒப்பந்தப் பண்ணைய முறையில் விவசாயிகள் மற்றும் கொள்முதல் நிறுவனங்கள் பயனடையும் வாய்ப்பு உருவாகும் என்பதால், இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

2019 பிப்ரவரி 14] [பேரவைத் தலைவர்]

பிரிவுகள் 2 முதல் 47 வரை மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 47 வரை மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் மற்றும் கால்நடை ஒப்பந்தப் பண்ணைத்தொழில் மற்றும் சேவைகள் (ஊக்குவிப்பு மற்றும் எளிதாக்குதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2019) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 2-45

12. வரவு-செலவுத் திட்டம், 2019-2020, பொது விவாதத்திற்கான பதிலுரை—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்ஜெட் உரையில் மொத்த கார்டுகளின் எண்ணிக்கை 2.01 கோடி என்று உள்ளது. ஆனால், உண்மையில் இருந்த கார்டுகள் 2,01,91,100 என்பது round off செய்யும்போது 2.019 கோடி எனக் குறிப்பிட்டிருக்க வேண்டும். 2.01 கோடி எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், பயனில் இருந்த கார்டுகள் 2,01,91,100 என்ற அடிப்படையில் அரசாணை ரூ.1,000/- வீதம் வெளியிடப்பட்டது. அதனடிப்படையில் துணை மதிப்பீடுகளில் 2019.11 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, இந்த ஒதுக்கீட்டில் எந்தவித தவறும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்க்கட்சியில் உள்ள மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் முனைவர் பொன்முடி அவர்களும் உரிய நேரத்தில் இதனைச் சொன்னதால் இந்தத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு நன்றி சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

13. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கக் கோரும் தீர்மானம். மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்கள்.